# DIRECTORATE OF HIGHER AND TECHNICAL EDUCATION

## ACHIEVEMENTS / NOTABLE ACTIVITIES FROM 01.04.2020 to 31.12.2020

- The Hon'ble President of India in March 2020 has given assent to the Puducherry Technological University Bill to upgrade the Puducherry Engineering College as Technological University. Accordingly Puducherry Technological University Act was notified in the Puducherry Official Gazette on 24.06.2020. It is the first State University of our U.T. of Puducherry.

- Perunthalaivar Kamarajar Institute of Engineering and Technology (PKIET), Karaikal and the Yanam Engineering College which is proposed to be started from this academic year will become the constituent colleges of the Puducherry Technological University. All the Government Polytechnic Colleges will be brought under this Technological University.

- PKIET, Karaikal will be positioned as Non-conventional Multi- Disciplinary Institute by starting Courses like (i) Agricultural Engineering (ii) Petrochemical Engineering and (iii) Bio Medical Engineering during this academic year 2020-21. To establish the new campus for PKIET, 25 Acres of Land has been acquired at Karaikal.

- The new Government Engineering College at Yanam will be positioned on the lines of Indian Institutes of Information Technology (IIIT) with specialized courses in Computer Science Engineering viz. (i) Robotic and Automation (ii) 3D-Animation and Graphics and (iii) Digital Techniques for Design and Planning. The construction work @ estimated cost of `.26.00 Crores will be completed during this financial year.

- It is proposed to upgrade Kanchi Mamunivar Centre for Post Graduate Studies also into another State University of Arts and Science for which proposal has been sent to Government of India. Also an amount of `.5.00 Crores has been sanctioned by Government of India for the development of research activities in Kanchi Mamunivar Centre for Post Graduate Studies, Puducherry

- In Pondicherry Engineering College, approval has been obtained for starting of a new branch namely B.Tech (Mechatronics) with a sanctioned intake of 60 students during this academic year. Also approval has been obtained for starting MBA Programme in International Business and Innovation Entrepreneur & Venture Development with 60 seats from this academic year 2020-21.

- Four job oriented B.Voc Courses will be started by PEC in the Polytechnic Colleges with 30 seats in each batch from this academic year. viz., (i) Interior Design (Civil) in Women's Polytechnic College, Puducherry, (ii) Refrigeration and Air Conditioning (Mechanical) in Mothilal Nehru Govt. Polytechnic College, (iii) Mobile Communication (Electronics &Communication) in Women's Polytechnic College, Karaikal and (iv) Graphics & Multimedia and Mobile App Development (Computer Science / Information Technology) in Dr.B.R.Ambedkar Polytechnic College, Yanam

- The National Institute of Electronics and Information Technology (NIELIT) has approved for setting up its Centre at Women's Polytechnic College, Puducherry during this academic year to offer Diploma, Certificate and Training Program in IT related job oriented courses.

- The application fee has been waived for all the students intending to join Government / Society run Arts and Science Colleges, Law College, Education College, Polytechnics and Engineering Colleges during the academic year 2020-21. This will benefit nearly 10000 aspiring students and it is also decided to waive of other miscellaneous fees such as Library fees, Sports Day fees, Magazine fees, College Day fees, Laboratory fees and such similar fees for all Below Poverty Line students for the academic year 2020-21.

- It is proposed to establish a Community College @ Mahe region by Pondicherry University as in Lawspet, Puducherry. 2 Acres of Land has been identified for the same which will be handed over to the Pondicherry University very soon and the students at Mahe region will be benefitted accordingly.

- **NIRF Rankings:-**

  Five Colleges of this U.T. were ranked as below by the National Institute for Ranking Framework 2020 :-

| | |
|---|---|
| Pondicherry Engineering College, Puducherry | 122nd rank among 1071 Engineering Colleges |
| Kanchi Mamunivar Centre for PG Studies, Puducherry | 56th rank among 1659 Arts & Science Colleges |
| Mahatma Gandhi Govt. Arts College, Mahe | 92nd rank among 1659 Arts & Science Colleges |
| Bharathidasan Govt. College for Women, Puducherry | Ranked between 101-150th position among 1659 Arts & Science Colleges |
| Indira Gandhi College of Arts and Science, Puducherry | Ranked between 151-200th position among 1659 Arts & Science Colleges |

# உயர்கல்வி மற்றும் தொழில்நுட்ப இயக்குனரகம்

01.04.2020 முதல் 31.12.2020 வரையிலான காலங்களில் **குறிப்பிடத்தகுந்த சாதனைகள்**

- புதுச்சேரி பொறியியல் கல்லூரியை தொழில்நுட்பப் பல்கலைக் கழகமாகத் தரம் உயர்த்துவதற்கான “புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழக சட்ட முன்வரைவுக்கு” மாண்பமை குடியரசுத்தலைவர் கடந்த மார்ச் 2020-இல் ஒப்புதல் அளித்துள்ளார். அதற்கிணங்க புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைகழகச் சட்டமானது **24.06.2020** அன்று புதுச்சேரி அரசிதழில் வெளியிடப்பட்டது. புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப் பரப்பின் முதலாவது மாநில அரசுப் பல்கலைக்கழகமாக இது விளங்கும்.

- காரைக்காலில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராசர் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியும் **(PKIET)** நடப்பு ஆண்டிலிருந்து செயல்படத் துவங்கவுள்ள ஏனாம் பொறியியல் கல்லூரியும் மேற்படி புதுச்சேரி தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக்கல்லூரிகளாக இருக்கும். அரசு பாலிடெக்னிக் பயிலகங்கள் அனைத்தும் இந்தப் புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

- காரைக்கால் பெருந்தலைவர் காமராசர் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் **(PKIET)** (i) வேளாண் பொறியியல் (ii)பெட்ரோ - வேதிப் பொறியியல் மற்றும் (iii) உயிரி-மருத்துவப் பொறியியல் போன்ற புதிய பாடப் பிரிவுகள் இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இதன் மூலம் அக்கல்லூரி மரபுசாரா பன்முகப் பொறியியல் பாடப் பிரிவுகள் கொண்ட சிறந்த நிறுவனமாக நிலை நிறுத்தப்படும். காரைக்கால் **PKIET** கல்லூரி வளாகம் அமைக்க ஏற்கனவே 25 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

- புதிதாகத் துவங்கப்படும் ஏனாம் பொறியியல் கல்லூரியானது கணினிப் பொறியியலில் சிறப்பு வாய்ந்த புதிய பாடப்பிரிவுகளுடன் இந்திய தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தை **(IIIT)** அடியொற்றி நிலை நிறுத்தப்படும். **(i) Robotic and Automation (ii) 3D Animation and Graphics and (iii) Digital Techniques for Design and Planning** என்னும் மூன்று பாடப் பிரிவுகளுடன் கூடிய ஏனாம் அரசு பொறியியல் கல்லூரி இந்த கல்வி ஆண்டிலிருந்தே செயல்படத் தொடங்கும். `.26 கோடி மதிப்பீட்டில் விரைவில் துவங்கப்படவுள்ள கட்டுமானப்பணி இந்த நிதிஆண்டிலேயே செய்து முடிக்கப்படும்.

- காஞ்சிமாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையத்தை (PG Centre) மாநில அரசின் கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகமாக சிறப்பாகத் தரம்

உயர்த்துவதற்கான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் புதுச்சேரி காஞ்சிமாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையத்தில் ஆராய்ச்சி நடவடிக்கைகளின் மேம்பாட்டுக்காக `. 5 கோடி மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

- புதுச்சேரி பொறியியல் கல்லூரியில் 60 மாணவர்கள் சேர்க்கையுடன் கூடிய **"B.Tech (Mechatronics)"** என்னும் புதிய பாடப் பிரிவு இந்த கல்வி ஆண்டிலேயே தொடங்கவும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேலும் **(i) International Business and (ii) Innovation Entrepreneur & Venture Development** ஆகிய இரண்டு மேலாண்மை முதுகலைப் பாடப் பிரிவுகள் **(MBA) 2020-21** இந்த ஆண்டே தொடங்கவும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளன.

- பாலிடெக்னிக் பயிலகங்களில் இந்த கல்வி ஆண்டில் அதிக வேலை வாய்ப்புள்ள நான்கு இளங்கலை **(Bachelor of Vocational "B.Voc")** பாடப்பிரிவுகள் புதுச்சேரி பொறியியல் கல்லூரியால் தொடங்கப்படவுள்ளது. இதன் அடிப்படையில் புதுச்சேரி மகளிர் பாலிடெக்னிக் பயிலகத்தில் **" Interior Design (Civil)"** என்னும் பாடப் பிரிவும், அரசு மோதிலால் நேரு பாலிடெக்னிக் பயிலகத்தில் **"Refrigeration and Air Conditioning (Mechnaical)"** என்னும் பாடத் பிரிவும் காரைக்கால் மகளிர் பாலிடெக்னிக் பயிலகத்தில் **"Mobile Communication (Electronics and Communication)"** என்னும் பாடத் பிரிவும் மற்றும் ஏனாம் டாக்டர்.பி.ஆர் அம்பேத்கார் பாலிடெக்னிக் பயிலகத்தில் **"Graphics and Multimedia and Mobile App Development (Computer Science/Information Technology)"** என்னும் பாடப்பிரிவும் தலா 30 இடங்களுடன் இந்த ஆண்டே தொடங்கப்படும்.

- இந்த கல்வி ஆண்டிலேயே தகவல் தொழில்நுட்பவியல் தொடர்பான வேலைவாய்ப்பு உடைய பாடப்பிரிவுகளில் பட்டயம் **(Diploma),** சான்றிதழ் **(Certificate)** மற்றும் பயிற்சி திட்ட **(Training)** வகுப்புகளை, நம் மாநிலத்தில் நடத்தும் பொருட்டு, தேசிய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் **(NIELIT)** புதுச்சேரி மையம் ஒன்றை புதுச்சேரி மகளிர் பாலிடெக்னிக் பயிலகத்தில் அமைப்பதற்கான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- 2020-21கல்வியாண்டில் அரசு மற்றும் அரசுசார்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், சட்டக்கல்லூரி, கல்வியியல் கல்லூரி, பாலிடெக்னிக்குகள், பொறியியல்கல்லூரிகள் மற்றும் தனியார் பொறியியல் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர விரும்பும் அனைத்து மாணவர்களுக்கும் விண்ணப்பக்கட்டணம் தள்ளுபடிச் செய்யப்பட்டுள்ளது. இதனால் கிட்டத்தட்ட 10000

ஆர்வமுள்ள மாணவர்கள் பயனடைவார்கள். 2020-21 கல்வியாண்டில் நூலகக்கட்டணம், விளையாட்டு கட்டணம், கல்லூரி இதழ் கட்டணம், கல்லூரி நாள் கட்டணம், ஆய்வகக் கட்டணம் மற்றும் இதே போன்ற பிறகட்டணங்களையும் வறுமைக்கோடுக்குகீழ் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் தள்ளுபடிச் செய்யப்பட்டுள்ளது.

- மாஹே பிராந்தியத்தில், புதுச்சேரி பல்கலைக்கழகத்தால் சமுதாயக் கல்லூரி ஒன்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.இதற்காக 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு விரைவில் புதுவை பல்கலைக்-கழகத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளது. இதனால் மாஹே பகுதியில் உள்ள மாணவர்கள் பயன் பெறுவர்.

- புதுச்சேரி யூனியன் பிராந்தியத்தை சேர்ந்த நான்கு கல்லூரிகள், தரவரிசை கட்டமைப்பிற்கான தேசிய நிறுவனத்தால் 2019-இல் வெளியிடப்பட்டுள்ள பட்டியலில் பெற்றுள்ள இடங்கள் பின்வருமாறு :-

| | |
|---|---|
| பாண்டிச்சேரி பொறியியல் கல்லூரி, புதுச்சேரி | 1071 பொறியியல் கல்லூரியில், 122 வது இடம் |
| காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம், புதுச்சேரி | 1659 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், 56- வது இடம் |
| மகாத்மா காந்தி அரசு கலை கல்லூரி , மாஹே | 1659 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில்,92வது இடத்தில் உள்ளது |
| பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி , புதுச்சேரி | 1659 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில்,101-150வது இடத்தில் உள்ளது |
| இந்திரா காந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதுச்சேரி | 1659 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில்,151-200 வதுஇடத்தில் உள்ளது |